# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2345/45 - 2023 අගෝස්තු මස 16 වැනි බදාදා - 2023.08.16

*2345/45 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய பொலிஸ் ஆணைக்குழு**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 155 ஓ யாப்பின் (4) ஆவது உறுப்புரையின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிகள்.

**ஈ. டப்ளியூ. எம். லலித் ஏக்கநாயக்க,**
தலைவர்,
தேசிய பொலிஸ் ஆணைக்குழு.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு அலுவலகம்,
9 ஆவது கட்டடம்,
பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகம்,
கொழும்பு 7,
2023, ஓகத்து 16.

**தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிகள்**

1. இவ்விதிகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழு(மேன்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2023 என அழைக்கப்படும்.

2. அரசியலமைப்பின் 155 ஊ மற்றும் 155 ஏ உறுப்புரைகளின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களை செயன்முறைப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட குழுவொன்றின் மூலமோ அல்லது பொலிஸ்மா அதிபரினாலோ அல்லது பொலிஸ் அதிகாரியினாலோ செய்யப்பட்ட பதவியுயர்வு, இடமாற்றம் மற்றும் ஒழுக்க விடயமாக மேற்கொள்ளப்பட்ட ஏதேனுமொரு கட்டளை அல்லது பதவி நீக்கம் தொடர்பாக அதிருப்திக்குள்ளாகும் எவரேனுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் தனக்கு வழங்கப்பட்ட அத்தகைய கட்டளைக்கு எதிராக எழுத்து மூல மேன்முறையீடொன்றை இவ்விதிகளுக்கமைய தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க முடியும்.

3. ஒரு அதிகாரிக்கு அவ்வாறானதொரு கட்டளை தொடர்பாக ஆணைக்குழுவுக்கு ஒரு மேன்முறையீடு மட்டுமே சமர்ப்பிக்க முடியும். அவ்வாறு மேன்முறையீடொன்றை மேற்கொள்ளும்போது அம் மேன்முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் அவற்றை உறுதிப்படுத்த தம்மால் வழங்கப்படும் ஆவணங்கள் உண்மையானதும் சரியானதுமானதாகும் என மேன்முறையீட்டை சமர்ப்பிக்கும் பொலிஸ் அதிகாரியினால் சத்தியக் கடதாசி மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் சத்தியக் கடதாசியில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்க வேண்டும்,

(அ) இப் பிரச்சினைக்குரிய விடயம் தொடர்பாக, இதற்கு முன்னர் வேறு மேன்முறையீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக;

(ஆ) இப் பிரச்சினைக்குரிய விடயம் தொடர்பாக, ஏதேனும் சட்ட நடவடிக்கை இடம்பெறுகிறதா அல்லது அவ்வாறான ஒரு சட்ட நடவடிக்கை நிறைவு பெற்றுள்ளதா என்பது தொடர்பாக;

(இ) அவ்வாறாயின் அது தொடர்பான குறிப்பிலக்கம் அல்லது வழக்கு இலக்கம் மற்றும் தொடர்புடைய ஏனைய தகவல்கள்.

4. (அ) ஒவ்வொரு மேன்முறையீடும் ஆணைக்குழுவின் செயலாளருக்கு பெயரிட்டு அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறு அனுப்பும் போது பதிவுத் தபாலில் அல்லது ஆணைக்குழுவின் மின்னஞ்சல் முகவரிக்கு (info@npc.gov.lk) அனுப்பப்படல் வேண்டும். அல்லது நேரடியாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கு கையளிக்கப்பட முடியும். அவ்வாறு கையளிக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டொன்று தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் வழங்கப்பட வேண்டும்.

(ஆ) மேன்முறையீட்டை சமர்ப்பிக்கும் முறையீட்டாளர் தொடர்பான கீழ்வரும் அடிப்படை தகவல்கள் அம் மேன்முறையீட்டில் குறிப்பிடப்பட வேண்டும்;

1. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்;
2. பதவி அல்லது பதவி இலக்கம்;
3. தற்போது வசிக்கும் விலாசம்;
4. தொலைபேசி இலக்கம்;
5. தற்போது அல்லது இறுதியாக சேவையாற்றிய இடம்;
6. மின்னஞ்சல் (இருப்பின்).

5. (அ) நியமிக்கப்பட்ட குழு அல்லது பொலிஸ்மா அதிபர் அல்லது பொலிஸ் அதிகாரி ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட உத்தரவு காரணமாக அதிருப்தியடைந்த பிரிவினரினால் அவ்வுத்தரவு கிடைக்கப்பெற்று 6 (ஆறு) மாதங்களுக்குள் மேன்முறையீடு செய்யப்பட வேண்டும்.

(ஆ) எவ்வாறெனினும், ஆறு மாதங்களுக்கு மேற்பட்டு செய்யப்படும் மேன்முறையீடுகள் தொடர்பில், அம் மேன்முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் நியாயத்தன்மை மற்றும் சம்பவங்களுக்கு காரணமாகியுள்ள விடயங்களை கருத்திற் கொண்டு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பூரண விருப்பத்திற்கமைய குறித்த மேன்முறையீட்டில் குறிப்பிடப்பட்ட விசேடமான காரணங்களை கருத்திற் கொண்டு மட்டுமே அதை ஏற்றுக் கொள்வதா, இல்லையா என தீர்மானிக்க ஆணைக்குழுவுக்கு முடியும். அவ்வேளையில் மேன்முறையீட்டில் காணப்படும் விசேட காரணங்களை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே அம் மேன்முறையீடு காலங்கடந்தும் கருத்திற் கொள்ளப்பட்டது என்பதை ஆணைக்குழு விசேடமாக குறிப்பிட வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட விதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்படாத மேன்முறையீடுகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் நிராகரிக்கப்படும்.

7. (அ) மேன்முறையீடொன்று விசாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில்,

I. சந்தர்ப்பத்திற்கேற்றவாறு: குறித்த குழு, பொலிஸ் மா அதிபர் அல்லது பொலிஸ் அதிகாரியின் அறிக்கை, அவதானிப்புகள், கோவைகள் மற்றும் குறிப்பிட்ட வேறு கோவைகளை கோருதல் மற்றும்,

II. மேன்முறையீட்டு அதிகாரியை ஆணைக்குழுவில் சமுகமளிக்கும்படி அழைக்க ஆணைக்குழுவுக்கு முடியும்.

(ஆ) இப் பந்தியின்கீழ் குறிப்பிட்ட கோவைகள் மற்றும் ஆவணங்கள் கோரப்பட்டிருக்கும் போது அவ்வாறான வேண்டுகோள் கிடைத்து ஒரு மாத காலத்தினுள் அதற்கமைய ஒத்திசைவாக நடவடிக்கை எடுத்தல் குறிப்பிட்ட குழுவின், அல்லது பொலிஸ்மா அதிபரின் அல்லது பொலிஸ் அதிகாரியின் கடமையாகும்.

8. குறிப்பிட்ட மேன்முறையீடு தொடர்பாக, ஆணைக்குழுவின் தீர்மானம் அல்லது தீர்ப்பு அத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு முப்பது நாட்களுக்குள் மேன்முறையீடு செய்தவருக்கு மற்றும் குழுவுக்கு, பொலிஸ்மா அதிபர் அல்லது பொலிஸ் அதிகாரிக்கு அறிவிக்கப்படல் வேண்டும். மேன்முறையீடு தொடர்பில், ஆணைக்குழு ஒரு தீர்மானம் அல்லது தீர்ப்பு வழங்கியிருக்கும் சந்தர்ப்பத்தில் மீண்டும் அது தொடர்பாக செய்யப்படும் மேன்முறையீடு மற்றும் அல்லது விண்ணப்பம் மற்றும் அல்லது வேண்டுகோள்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடாது.

9. "ஆணைக்குழு" என இங்கு குறிப்பிடப்படுவது அரசியலமைப்பின் 155 ஆம் உறுப்புரையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட "தேசிய பொலிஸ் ஆணைக்குழுவாகும்"

10. 2016, திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை 1997/23 ஆம் இலக்கமுடைய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2016 தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் மேன்முறையீட்டு செயன்முறை விதிகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

EOG 08-0174

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.